# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 186/2018

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-1/PW-1 |
| Name | : திரு. இளங்கோவன் |
| Father/Husband's Name | : பன்னீர்செல்வம் |
| Village | : கூடுவாஞ்சேரி |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.03.2025.

**முதல் விசாரணை–**

நான் தற்போது கூடுவாஞ்சேரியில் வசித்து ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 24.11.2017 அன்று என்னுடைய சொந்த ஊரான மயிலாடுதுறையில் உள்ள கொட்டூர் உள்ள குலதெய்வ கோயிலுக்கு சென்றேன். பின்னர் 26.11.2017 அன்று காலை 06.00 மணியளவில் எதிர் வீட்டை சேர்ந்த பாலாஜி என்பவர் போன் செய்து எங்கள் வீட்டு கதவு உடைத்திருப்பதாக சொன்னார். பின்னர் நாங்கள் வீட்டை வந்து பார்த்த போது கூடுவாஞ்சேரி போலிசார் மற்றும் எனது அண்ணன் வீட்டிற்கு வந்திருந்தனர். பீரோவில் வைத்திருநத சுமார் 32 சவரன் தங்க நகைகள் மற்றும் 1 கிலோ வெள்ளி திருடு போயிருந்தது. ஆரம் ஒன்று, நெக்லஸ் இரண்டு கல் வைத்தது -1, மற்றும் கல் வைக்காதது - 1, மோதிரம், தோடு, வெள்ளி தட்டு, சந்தன கிண்ணம், டம்ளர், பூஜை சாமான்கள் ஆகியவை

திருடு போயிருந்தன. பின்னர் திருடு போனது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **<u>எனது கையொப்பத்துடன் உள்ள புகார் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** ஒரு வருடம் கழித்து போலிசார் போன் செய்து திருடு போன நகைகள் கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். நான் நீதிமன்றத்தில் உரிய மனு செய்து திருடு போன நகைகளை திரும்ப பெற்று கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க நகைகள் மற்றும் வெள்ளி பொருட்கள் என்னுடையது தான். நான் அதனை பெற்று சென்றுவிட்டேன். **<u>புகைப்படத்தில் காணப்படும் பொருட்கள் சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

இந்த சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். புகாரில் 30 சவரனும், போலிசார் விசாரணையில் 34 சவரனும், முதல் விசாரணையில் 32 சவரனும் காணாமல் போயிருப்பதாக நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். காணாமல் போனதாக சொல்லப்படும் நகைகளை குறிக்கும் வகையில் நான் புகைப்படங்கள் மற்றும் அதற்குண்டான ஆவணம் எதையும் போலிசாரிடம் கொடுக்கவில்லையென்றால் சரியல்ல. நான் நகைகள் வாங்கிய இரசீதுகளை போலிசிடம் ஒப்படைத்தேன். போலிசார் அதனை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லையென்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. காணாமல் போனதாக சொல்லப்படும் நகைகளை பற்றி விரிவான விவரங்கள் அதாவது அதனுடைய எடை, மாடல் போன்றவற்றை எதையும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் சம்பவம் நடந்த நாளன்று திருநள்ளாறு ஊரிலிருந்து 4 மணி நேரத்தில் நான் எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் வீட்டிற்கு வரும் போதே போலிசார் அங்கிருந்தனர். திருடு சம்மந்தமாக யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவம் சம்மந்தமாக புகார் யார் அளித்தார்கள் என்றால் நான் தான் எழுதி கொடுத்தேன். புகார் காவல் நிலையத்தில் எந்த தேதியில், எந்த

நேரத்தில் கொடுத்தேன் என்றால் என்ன நேரத்தில் கொடுத்தேன் என்று நினைவில்லை. புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களும், தேதியும் வெவ்வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில், சொன்ன சமயத்தில் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே எனது வீட்டில் திருடு போயிருந்தால் நான் சரியான விவரங்கள் புகாரில் குறிப்பிட்டு இருந்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 186/2018

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-2/PW-2 |
| Name | : திருமதி. சித்ரா |
| Father/Husband's Name | : இளங்கோவன் |
| Village | : கூடுவாஞ்சேரி |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.03.2025.

**முதல் விசாரணை—**

நான் தற்போது கூடுவாஞ்சேரியில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 24.11.2017 அன்று நானும், அசா 1 எனது கணவரும் எனது சொந்த ஊரான மயிலாடுதுறைக்கு குல தெய்வ கோயிலுக்கு சென்றிருந்தோம். அப்போது 26.11.2017 அன்று காலை 06.00 மணியளவில் எங்கள் எதிர் வீட்டை சேர்ந்த பாலாஜி என்பவர் போன் செய்து எங்கள் வீட்டு கதவு உடைத்திருப்பதாக சொன்னார். பின்னர் நாங்கள் அங்கிருந்து காரில் திரும்பி வந்து எங்களது வீட்டை பார்த்த போது எங்கள் வீட்டு கதவு உடைக்கப்பட்டிருந்தது. பின்னர் பீரோவை பார்த்த போது பீரோவில் வைத்திருந்த சுமார் 30 சவரனுக்கு மேல் தங்க நகைகளான காசு மாலை, ஆரம், நெக்லஸ் கல் வைத்தது 1, கல் வைக்காதது 1, கம்மல், மோதிரம் 6 சவரன் திருடு போயிருந்தன. வெள்ளி நகைகளான காமாட்சி அம்மன் விளக்கு,

குத்துவிளக்கு, குங்குமசிமிழ், சந்தன கிண்ணம், வெள்ளி கொலுசு ஆகியவைகள் திருடு போயிருந்தன. பின்னர் இது சம்மந்தமாக எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். நான் உடன் சென்றிருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை –** இல்லை.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.